I Additional District Court, Thoothukudi.

O.S.No. 127/2021 நாள் : 22.08.2025

வா.சா.2– திரு.முத்துபாண்டியன்.

குறுக்கு விசாரணை :–

1ம் வாதியின் கணவர் கண்ணன் எனக்கு 15 ஆண்டுகளாக பழக்கம். அவர் இடம், வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தார். தாவா சொத்தை நான் பார்க்கவில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர் சில்லரை. ஒப்பந்தம் போடும்போது சொத்திற்கான வில்லங்கத்தை எடுத்துப் பார்க்கவில்லை. உண்மையில் சொத்தை வாங்குபவர் வில்லங்கம் எடுத்துப் பார்ப்பார் என்றும், வலைதளத்திலும் வில்லங்கத்தை பார்க்கலாம் என்றும் சொன்னால் சரிதான். நான் 20 ஆண்டுகளாக நிலத்தரகராக இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு நிறைய சொத்துக்களை கிரையம் முடித்திருக்கிறேன். முதலில் விவசாயமும் பார்த்தேன். கோவில்பட்டி புதிய பேருந்துநிலையத்தில் உள்ள ஜோதி டீக்கடைக்கு நான் வழக்கமாக டீ குடிக்கச் செல்வேன். டீக்கடையில் இடம் வாங்குவது சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்தேன். யாரிடம் பேசினேன் என்று ஞாபகமில்லை. நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது சின்ன சுப்பையா மற்றும் குருவம்மாள் ஆகியோர் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மேற்படி குருவம்மாள் யார் என்று எனக்குத் தெரியாது. சின்ன சுப்பையாவையும் நான் அதற்கு முன்பு பார்த்ததில்லை. குருவம்மாள் தையல் தொழில் செய்துவருவதாக கேள்விப்பட்டேன். சின்ன சுப்பையா ஆசிரியராக வேலை செய்து வந்தார். குருவம்மாள் என்னிடம் வந்து சொத்து வாங்க ஆள் இருக்கிறார்களா என்று கேட்டார். குருவம்மாள் கையில் பத்திரம் எதுவும் வைத்திருக்கவில்லை. ரியல் எஸ்டேட் தொழில் செய்ய ஆண் ஆட்கள்தான் தேவைப்படும் என்றால் தற்போது பெண்களும் வேலை

செய்கிறார்கள். குருவம்மாள் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதில்லை. சின்ன சுப்பையா ரியல் எஸ்டேட் தொழில் செய்தாரா என்றால் எனக்குத் தெரியாது. அந்த தேதியில் சின்ன சுப்பையாவிடமும் நான் எந்த ஆவணமும் பார்க்கவில்லை. 2020ம் ஆண்டு மூன்றாவது மாதம் 2, 3 தேதிகளில் மேற்படி இருவரையும் பார்த்தேன். அதற்கு முன்பாக நான் அவர்களை பார்க்கவில்லை. தாவா சொத்து விலைக்கு வருவதாக குருவம்மாள் சொன்னார். குருவம்மாள் என்னிடம் கைபேசி எண் கொடுத்தார். மேற்படி குருவம்மாள் பிரதிவாதியிடம் சொல்லி எங்களை வரச்சொன்னார். அவரது கைபேசி எண்ணை நான் பதிவு செய்துகொள்ளவில்லை. என்னிடம் 1ம் வாதியின் கணவர் கண்ணன் கிரையம் பேசுவதற்காக போவோம் என்று நான் மணியாச்சியில் இருக்கும்போது சொன்னார். மேற்படி கண்ணன், வா.சா.3 மற்றும் நான் ஆகியோர் போனோம். நாங்கள் போகும்போது காலை 10 மணியிருக்கும். அன்றே பிரதிவாதி வீட்டிற்கு சென்று கிரையம் பேசிவிட்டோம். மறுநாள் பிரதிவாதி வீட்டிற்கு சென்றேன். அப்போது பிரதிவாதி வீட்டில் பிரதிவாதி, அவரது மகன், குருவம்மாள், சின்ன சுப்பையா ஆகியோர் இருந்தார்கள். அப்போது காலை 11 மணியிருக்கும். கிரையம் பேசும்போது பிரதிவாதியின் கிரைய பத்திரம் பார்த்தோம். அவர் அசல் பத்திரம் வைத்திருந்தார். அதை எல்லாம் பரிசீலித்துதான் கிரையம் பேசினோம். அங்கிருந்த அனைவரும் கிரையம் பேசினோம். சொத்தை நான் பார்க்கவில்லை என்பதால் சொத்தின் மதிப்பு எனக்குத் தெரியாது. பேசப்பட்ட மதிப்பு சரியான மதிப்பா என்று எனக்குத் தெரியாது. கிரைய மதிப்பு ஒரு செண்ட்டுக்கு ரூபாய் 1,17,000/-ம் பேசினோம். அந்த மதிப்பு சரியானதா என்பதற்கான ஆவணத்தை பார்க்கவில்லை. தாவா சொத்து அருகில் இருந்தவர்களிடம் மதிப்பு குறித்து விசாரிக்கவில்லை. ஒப்பந்த பத்திரம் யாரால் எங்கு

தயாரிக்கப்பட்டது என்றும், அதற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றும் எனக்குத் தெரியாது. மறுநாள் பத்திரத்தை வாங்கி வந்து ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது. அப்போது மேற்படி கண்ணன் பணம் கொடுக்க வேண்டுமென்று என்னை அழைத்தார். மேற்படி கண்ணன், நான் மற்றும் வா.சா.3 ஆகியோர் பிரதிவாதி வீட்டிற்கு போனோம். அப்போது காலை சுமார் 9 மணியிருக்கும். நல்ல நேரம் பார்த்துச் சென்றதால் காலை 9 மணிக்கு போனோம். அப்போது ஒப்பந்த பத்திரத்தை தயாரித்து கொண்டுவந்தவுடன் பிரதிவாதி, அவரது மகன், சின்ன சுப்பையா, குருவம்மாள் ஆகியோர் கையொப்பமிட்டார்கள். ஒப்பந்தம் எழுதப்பட்ட அன்று ரூபாய் 50 ஆயிரத்தை பிரதிவாதிக்கு கண்ணன் கொடுத்தார். பணம் ரொக்கமாகத்தான் கொடுக்கப்பட்டது. பெரிய தொகைக்கான ஒப்பந்தமாக இருந்தால் அதை பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ1 பதிவு செய்யப்படவில்லை. வா.சா.ஆ1ல் என்ன எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அதில் நான் கையொப்பம் மட்டும்தான் போட்டேன். மற்றபடி ஒப்பந்தம் பற்றி எனக்குத் தெரியாது. 50 ரூபாய் முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதப்பட்டது. ஒரு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டால் அதை தயாரித்தவர் என்ற முறையில் அந்த நபர், தன் பெயர், தகப்பனார் பெயர், முகவரி மற்றும் புகைப்படத்துடன் அடையாள அட்டையை இணைக்க வேண்டுமென்றால் சரிதான். மேற்படி விபரங்கள் அதில் எழுதப்பட்டிருந்ததா என்றால் நான் அதை படிக்கவில்லை. ஆவணம் தயாரித்தவர் கையொப்பத்திற்கு மேல் சாட்சிகள் கையொப்பமிடுவார்கள். ஆவணத்தை தயாரித்தவர் கையொப்பமிடவில்லை என்றால் அந்த பத்திரம் செல்லாது. நான் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தில் ஆவணத்தை தயாரித்தவர் கையொப்பமிட்டிருந்தார். அவர் பெயர் தெரியாது. அவர் ஆங்கிலத்தில் கையொப்பமிட்டதால் அவர் பெயர்

தெரியாது. சொத்து குறித்து வில்லங்கம் இருந்ததாகவும், வில்லங்கத்தை தீர்த்து கிரையம் செய்து கொடுப்பதாகவும் கிரைய ஒப்பந்தத்தில் வாசகம் இருந்தது.

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.22 17:22:42 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.